DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 08.09.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.17/2025 |
| Deposition of Witness for Prosecution | : | PW.1 |
| Name | : | குப்புசாமி |
| Father Name | : | அருணாசலம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 08.09.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், பிலியூரில் குடியிருந்து வாட்ச்மேனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். ஹனிராக் எஸ்டேட்டில் வாட்ச்மேனாக பணிபுரிந்து வருகிறேன். சுமார் 5 மாதங்களுக்கு முன்பு காலை 06.30 மணிக்கு ஆஜர் எதிரி எஸ்டேட்டிற்கு புல் அருக்க வந்தார். ஏன் இங்கு புல் அருக்கிறீர்கள் என்று கேட்டேன் அதற்கு ஆஜர் எதிரி நான் அப்படி தாண்டா செய்வேன் உன்னால முடிஞ்சத பாத்துக்கோ பின்னர் அங்கு இருந்த பிரதரிடம் சொல்ல செல்ல முயன்றபோது ஆஜர் எதிரி கையால் இடது பக்கம் கண்ணத்தில் அடித்தார். நான் மயங்கி கீழே விழுந்துவிட்டேன் அப்போது எனது கையில் இருந்த கத்தியை பிடிங்கி கழுத்தில் வெட்ட வந்தார் அப்போது அதை தடுத்ததால் எனது இடது கையில் ஆட்காட்டி விரலில் வெட்டினார். ஆனால் எனது கையில் அதிக ,இரத்தம் வந்த காரணத்தினால் பிரதர் என்னை

ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கிருந்த மருத்துவர்கள் என்னை மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 2 வாரம் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். சேலத்திலும் முறையான சிகிச்சை இல்லாத காரணத்தினால் எனது பெரிய மகள் வீடான திருப்பூரிற்கு சென்று விட்டேன். அங்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலீசார் என்னை ஏற்காடு அரசு மருத்துவமனையில் இருந்தபோது விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் கத்தியால் தான் ஆஜர் எதிரி என்னை வெட்டினார். **கத்தியானது அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

இல்லை.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R.Elanchezhian,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.